# விடை தேடும் வினாக்கள்



## தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 10. தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள்

மொழி, மனித இனம் கண்ட மகத்தான கருவிகளில் தலையாயது. கருத்துப் பரிமாற்றத்திற்காக உருவாக்கப்பட்ட மொழி, காலப்போக்கில் மனிதகுல சிந்தனை வளர்ச்சிக்கும், நாகரிகம் மற்றும் பண்பாட்டிற்கும் மிகப் பெரும் துணையாயிற்று. அடுத்துவரும் தலைமுறையினருக்கும் தங்கள் கருத்துக்கள் சென்று சேரவேண்டும் என்று சிந்தித்த மனிதகுலம், எழுத்து மொழி கண்டது. அதன் வளர்ச்சியில் இலக்கியங்கள் பிறந்தன. நாகரிகப்பதிவுகளும், மனித குல வரலாறும், மொழி, இலக்கியமாக மலர்ந்த பிறகே அரும்பத் தொடங்கின.

உலகில் இன்று பேச்சும் எழுத்தும் கொண்டு இலங்கும் மொழிகள் பலநூறு. அவற்றுள்ளும் இலக்கியவளம் உடையன மிகச்சில. காலப் பழமையும், சாலப் பெருமையும் உடையன விரல்விட்டு எண்ணத்தக்கன. பிற மொழிகளின் கலப்பின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல்மிக்க மொழிகளை, உயர் தனிச்செம்மொழி என்பர் அறிஞர் பரிதிமாற் கலைஞர். அத்தகு மொழிகளுள் ஒன்று நமது தாய்மொழியாகிய தமிழ். தமிழ் மொழியின் இலக்கிய வளம் மிகப்பெரிது. அதன் வரலாறு நீண்டது. பெருமை அளவிட்டு உரைக்க இயலாத தன்மை உடையது.

www.saivamonline.com

தமிழ் இலக்கியம் படைத்தளித்த பலரும் மனித நேயம் மிக்கவர்கள். உயிர்க்குலத்தின்பால் அன்பு பூண்டவர்கள். பண்பாட்டுச் செல்வர்கள். குறுகிய எண்ணங்களுக்குள் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளாது, உலகவானில் சிறகடித்துப் பறந்தவர்கள், தொகுத்து உரைப்பதானால் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் ஒருங்கே நிறைந்த சான்றாண்மைச் செல்வர்கள். அவர்கள் தங்கள் படைப்புக்களைத் தமிழ் மொழியில் படைத்தார்கள். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்காக மட்டும் படைத்தவர்கள் அல்லர், உலகில் வாழும் மனிதகுலம் அனைத்திற்கும் ஒருசேரப் பயன்படும் கருத்துக்களை எடுத்துரைப்பதிலேயே அவர்கள் நெஞ்சம் தோய்ந்திருந்தது. தான், தன் பெண்டு, தன்பிள்ளை, தன் மொழி, தன்நாடு என்ற

---

**தமிழ் இலக்கியம் படைத்தளித்த பலரும் மனித நேயம் மிக்கவர்கள். உயிர்க்குலத்தின்பால் அன்பு பூண்டவர்கள். பண்பாட்டுச் செல்வர்கள். குறுகிய எண்ணங்களுக்குள் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளாது, உலகவானில், சிறகடித்துப் பறந்தவர்கள். தொகுத்து உரைப்பதானால் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் ஒருங்கே நிறைந்த சான்றாண்மைச் செல்வர்கள்.**

---

சிற்றெல்லைகள் தகர்க்கப்படும் போதுதாமே உலகச் சிந்தனைகள் அரும்பத் தொடங்குகின்றன. உலகச் சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் ஒன்றல்ல, இரண்டல்ல ஓராயிரத்திற்கு மேலும் உண்டு. அவற்றை விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

மொழி, இனம், நாடு என்ற பெயரில் உலகம் சிதறுண்டுவிடுமோ என்ற அச்சத்தின் விளிம்பில் மனித குலம் நிற்கும் காலம் இது. மொழி வழி ஒருமை, தேசிய ஒருமை, உலக ஒருமை என்ற சிந்தனைகளின் இன்றியமையாமை உணரப்படும் நேரம் இது, இத்தகு நேரத்தில் தமிழ் இலக்கியங்களை முன்னிறுத்தி உலகச் சிந்தனைகளைத் திரட்டி, மனித குலத்திற்கு



www.saivamonline.com

வழங்குவது பெரிதும் பயன்பாடு உடையது. இன்று போல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியல் அறிவு நம் முன்னோர்களிடம் நிறைவாக இல்லாதிருக்கலாம். ஆனால், மனிதநேயம், மானுடப்பண்பு, மனிதகுல ஒருமையில் நம்மினும் அவர்கள் மேம்பட்டிருந்தனர் என்பது மறுக்க இயலாதது.

அறிவாவது யாது? இந்த வினாவிற்கு விடை தருவோர் பலரும் அறிவு கல்வியால் உருவாக்கப்படுவது என்றனர். உண்மையில் அறிவு என்பது கல்வியால், உருவாக்கப்படுவது அன்று; கல்வி அறிவைக் கூர்தீட்டி ஒளி விடச்செய்யும் ஒரு கருவி. அறிவு என்பது, உயிர்க்குணம். எல்லா உயிர்களிடத்திலும் பிறப்புவகையால் தாமே அமைந்து கிடப்பது. இந்த விளக்கங்களை நினைவில் வைத்துக்கொண்டு, உலகப் பொதுமறை படைத்த தமிழ்ச் சான்றோர் திருவள்ளுவரிடம் செல்கிறோம். வினவுகின்றோம், அறிவாவது யாது?

அறிவு என்பது, அற்றங்காக்கும் கருவி; மனத்தை நன்றின்பால் உய்ப்பது; மெய்ப்பொருள் காணத் துணைநிற்பது;

---

**இன்று போல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியல் அறிவு நம் முன்னோர்களிடம் நிறைவாக இல்லாதிருக்கலாம். ஆனால், மனிதநேயம், மானுடப்பண்பு, மனிதகுல ஒருமையில் நம்மினும் அவர்கள் மேம்பட்டிருந்தனர் என்பது மறுக்க இயலாதது.**

---

நுண் பொருள் காண உதவ வல்லது. நான்கு விளக்கம் கூறிய வள்ளுவர் ஐந்தாவதாக அறிவிற்கு நாம் சற்றும் எதிர்பாராத, உலகில் எந்த ஒரு கவிஞரும் சிந்திக்க புதிய விளக்கம் ஒன்றைத் தருகிறார்.

''உலகந் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு''

ஒட்பம் என்ற சொல் அறிவைச் குறிப்பது. எது அறிவு? ''உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுவது அறிவு;'' ஊரோடு ஒத்துவாழ்;



www.saivamonline.com

''ஊரொடுபகைக்கின் வேரோடும் கெடும்'' என்பன தமிழர் வழங்கும் பழமொழிகள், உறவொடு ஒத்துப்போதல், ஊரோடு ஒத்துவாழ்தல், நாட்டொடு நட்புச் செய்தல் என்ற எல்லைகளைத் தாண்டி உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுதல் அறிவு என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. உண்மைதான்; நமக்குச் சந்திரமண்டிலத்தில் குடியேறும் விஞ்ஞான அறிவு உண்டு. ஆனால் அடுத்த வீட்டுக்காரன் நெஞ்சில் இடம் பிடிக்கும் பண்பாட்டு அறிவு உண்டா? இல்லையே மனித குலத்தை நேசிக்கத் தெரியாத அறிவு, அறிவே அல்ல. என்ன இப்படிக்கூறுகிறீர்கள்? நான் எத்தனை ஆண்டுப் படித்திருக்கிறேன், எவ்வளவு பட்டம் பெற்றிருக்கிறேன், எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறேன் எனக்கா அறிவு இல்லை என்ற கோபம் நமக்கு வருகிறது, வ்ள்ளுவப்பெருந்தகை மேலும் ஆத்திரம் ஊட்டுகின்றார்.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்''

---

**உறவொடு ஒத்துப்போதல், ஊரொடு ஒத்து வாழ்தல், நாட்டொடு நட்புச் செய்தல் என்ற எல்லைகளைத் தாண்டி உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுதல் அறிவு என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உண்மைதான்; நமக்குச் சந்திர மண்டலத்தில் குடியேறும் விஞ்ஞான அறிவு உண்டு. ஆனால் அடுத்த வீட்டுக்காரன் நெஞ்சில் இடம் பிடிக்கும் பண்பாட்டு அறிவு உண்டா? இல்லையே.**

---

எவ்வளவு அழுத்தமான சிந்தனை? உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் பலகற்றும் அறிவிலாதார் என்கிறார். இது வள்ளுவர் பெரிதாகப் போற்றும் ஒழுக்கத்தின் இலக்கணம் கூறும் திருக்குறள். உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக்கல்லார், பல நூல்களையும் கற்றாராயிலும் அறிவிலாதவரே என்கின்றது குறள்.



www.saivamonline.com

உரைதரவந்த பரிமேலழகர் மேலே ஒருபடி போய், பட்டை தீட்டுகின்றார். ''உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது, உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல்'' என்கிறார். உலகம் என்ற வள்ளுவர் ஆட்சிக்கு அவர் ''உயர்ந்தோர்'' என்று பொருள் காண்கிறார். உலகம் என்பது உலகமக்களைக் குறிப்பதுதான். ஆனால் 'உலகில் கீழோர் ஒழுகியவாறு ஒழுகுவது ஒழுக்கம் அன்று உயர்ந்தோர்வழி ஒழுகுவது' என்று நமக்கு ஐயம் நீக்குகின்றார் உரைகாரர். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழித்து. சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க ''உலகத்தோடு ஒட்ட'' என்றும், கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப்பயன் ஒழுக்கமும் ஆகலின், அவ்வொழுகுதலைக் கல்லாதார் ''பல கற்றும் அறிவிலாதார்'' என்றும் கூறினார் என உரை செய்யும் பரிமேலழகர், அவ்வக்காலத்து வாழும் உலகச் சான்றோர் போற்றும் நெறியே ஒழுக்கம் என அடையாளம் காட்டுகின்றார்.

---

**திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது. தமிழருக்காக மட்டுமா எழுதப்பட்டது; இல்லையே. தமிழர் மொழி, நாடு, ஊர், அரசு, எல்லை, ஏன் தமிழ் என்ற சொற்கூட வள்ளுவத்தில் இல்லை. உலக மக்களுக்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிந்தித்த ஒரு பேரறிஞரின் சிந்தனைத் தொகுப்பல்லவா திருக்குறள்? நாம் பெருமிதம் கொள்ளலாம்.**

---

''தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள்'' என்பதை உலகம் பற்றிய பொதுச் சிந்தனைகள் என்றும், உலகத்தார்க்கெல்லாம் பொதுவாகிய சிறப்புச் சிந்தனைகள் என்றும் பகுத்து அறியலாம். ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ்கூறும் நல்உலகம்'' எனத் தொல்காப்பியப் பாயிரம், தமிழ் வழங்கும் நிலப்பகுதிக்கு எல்லை வரையறுக்கிறது. தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை தமிழ் இலக்கியவாதிகளுக்குத் தமிழகம், பாரதம் உலகம் என்ற பாகுபாடு நன்கு தெரிந்தே வந்திருக்கிறது.



www.saivamonline.com

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்று
இவ்வங்கண் உலகளித்த லான்".

என, தமிழகம், பாரதம் இவற்றை உள்ளடக்கிய உலகத்தை இளங்கோவடிகள் குறியிட்டுக்காட்டிப் போற்றுகின்றார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என வள்ளுவர் உலகுக்கு முதல்வன் ஒருவன் உளன் என பிரமாணப்படுத்துகின்றார்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"

எனத் திருமுருகாற்றுப் படையைத் தொடங்கும் நக்கீரர், உலகத்தை வலமாக ஞாயிறு சுற்றி வருதல் போல் உலகத்தை அடையாளம் காட்டுகிறார்.

---

**உலகியலில் அறக்கோட்பாடு முற்றிலும் ஒத்துப் போகாதிருக்கலாம். நாம் வாழும் உலகத்தின் போக்கை நுனித்தறிந்து, அதற்குத் தகச் செயற்படும் அன்பு கலந்த சமூக நலம் பேணும் தனிமனித ஒழுங்கினை ஒப்புரவு என வள்ளுவர் வகுக்கிறார்.**

---

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்"

என்று திருமாலைக் காப்பிய நாயனாக முன்னிறுத்தும் கம்பர் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஆகிய முத்தொழிலை விளையாட்டாகச் செய்பவன் எவனோ அவன் தலைவன் என, நாம் வாழும் நிலவுலகை இனங்காட்டிப் பேசுகின்றார்.

தமிழ் மக்கள் போற்றி வழிபடும் நடராசப் பெருமானைத் தெய்வச் சேக்கிழார், பெரியபுராணக் கடவுள் வாழ்த்தில்,

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்"



www.saivamonline.com

எனப்பேசி, உலகத்து வாழ்வாரால் உணரவோ ஓதவோ மாட்டாத பெரும்பொருள் சிவன் என பெருமிதம் கொள்ளுவார்.

நாம் வாழும் இம்மண்ணுலகம் அல்லாத வேறு உலகங்கள் பற்றியும் தமிழ் இலக்கியச் சான்றோர்களுக்குத் தெளிவான கருத்து உண்டு.

எல்லா உலகமும் ஆனான் கண்டாய்''

என உலகம் பல என்கிறார் நாவுக்கரசர். மேலே பல படிகடந்து மாணிக்கவாசகர் தம் திருவாசகத் திருவண்டப்பகுதியில்,

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன''

---

**உலகினைக் காடு திருத்தி நாடாக்கியவர்களும், திட்டமிட்டுக் கல்வி தந்தவர்களும், அறிவால் புதுமை கண்டு மனித குலத்தை வாழ்வித்தவர்களும், என்றென்றும் உலகத்தார் வணக்கத்துக்கு உரியவர்கள்.**

---

என வானவெளியில் நிலைபெற்றிருக்கும் பல்வேறு உலகங்களையும் அவற்றின் பரப்புக்களையும், சைவ ஆகமநெறி நின்று பேசி வியப்பூட்டுகின்றார்.

''யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

எனப் பேசும் வள்ளுவர், இம்மண்ணுலகம் அல்லாது மேலே ஒரு தேவ உலகம் இருப்பதையும், அதற்கு மேலே ஒரு வீட்டுலகம் இருப்பதையும் உடன்படுகிறார்.

''தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு''

என்ற காமத்துப்பால் குறளில், தாமரைக் கண்ணனாகிய திருமால் உலகம் ஒன்றை அவரே அடையாளம் காட்டுகின்றார்.



www.saivamonline.com

''அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஓர் குறை இல்லையே'' எனத் தேவார ஆசிரியர் ''சிவலோகத்தை'' நினைப்பிக்கிறார். நிலவுலகம் அல்லாது கீழ்உலகம் ஏழு, மேல் உலகம் ஏழு உள்ளன எனப் புராணங்கள் கூறுகின்றன. மேல் உலகமாக அகராதிகள் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்பனவற்றைக் குறிக்கின்றன. கீழ் உலகங்களாக, அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், ரசாதலம், பாதாளம் என ஏழை அவை சுட்டுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வோர் உலகத்தைச்சுட்டும் புராணங்களும் உண்டு. இவற்றைக் கற்பனை என்று ஒதுக்கவோ, உண்மை என்று ஏற்கவோ இயலாதநிலை இன்றுவரை நிலவுகின்றது.

தமிழ்ச்சான்றோர் பல்வேறு உலகங்களை அறிந்து சுட்டியது போல், நாம் வாழும் இம்மண்ணுலகின் இயல்புகளையும் அறிவியல் கண் கொண்டு ஆய்ந்து சுட்டியுள்ளனர். தொல்காப்பியர், பொருளதிகாரத்தில் இவ்வுலகம் கடலால் சூழப்பட்டுள்ளது என்பதைப்

---

**முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை அளித்த பேகன், கல்லணை கட்டிய கரிகாலன், தஞ்சைப் பெரிய கோயில் கட்டிய இராசராசன் ஆகியோர் இன்று இல்லை. ஆனால் அவர்கள் புகழில் அழியாது வாழ்கிறார்கள்.**

---

''படுதிறை வையம் பாத்திய பண்பே''

எனக் குறிக்கிறார். மரபியலில் மேலும் உயர்ந்து, உலகமாவது யாது என்ற வினாவிற்கு அவரே அரியவிடை தருகிறார். ஐம்பெரும் பூதங்களும் கலந்து மயங்கும் மயக்கமே உலகம் என்பதை,

''நிலம்தீ நீர்வளி விசும்பொடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்''

எனப் பதிவு செய்துவியப்பூட்டுகின்றார். பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிறந்தமுறையைப் பரிபாடல் பேசுகிறது. பூதங்களின்



www.saivamonline.com

வடிவம், நிறம் அடையாளம், எழுத்து அதிதேவதைகள் முதலியவற்றைச் சைவசித்தாந்த சாத்திரமாகிய உண்மை விளக்கம் நிரல்படக் கூறும். வள்ளலார் சித்தர்கள் முதலியோர் உலகம் பற்றித்தரும் செய்திகள் மிகப்பல. இவைமேலேழுந்த வாரியான ஒரு மதிப்பீடே அன்றி முழுமை உடையது அன்று. இதனை ஓரளவில் நிறைவித்துக்கொண்டு, தமிழ் இலக்கியவாதிகளின் உலகளாவிய மனித குல நலச் சிந்தனைகளில் நாம் கண்ணோட்டம் செலுத்தலாம். இவை பெரிதும் பயன்பாடு உடையன.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்ற மகாகவி பாரதியின் மதிப்பீடு போற்றத்தக்கது. நரிவெரூஉத்தலையார் என்ற புறநானூற்றுக் கவிஞர் திருவள்ளுவ மாலையில்,

---

**திருக்குறள் மட்டுமன்று; நாலடியாரும், ஆசாரக் கோவையும், நீதிநெறி விளக்கமும், உலகநீதியும், ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் கூட உலகச் சிந்தனைகளின் பிழிவுகளாகவே திகழ்கின்றன. உலகின் வேறு எந்த ஒரு மொழி இலக்கியமும், தமிழ் போல உலகளாவிய சிந்தனைகளை உள்ளடக்கி இருக்க இயலுமா என்ற வியப்பு நம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கிறது.**

---

''இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்
முன்பு அறியச்சொன்ன முதுமொழிநூல் மன்பதைகட்கு
உள்ள அரிதென்று அவை வள்ளுவர் உலகம்
கொள்ள மொழிந்தார் குறள்''

என வள்ளுவர் உலகம் கொள்ள குறள் மொழிந்த உண்மையைப் பறை சாற்றுகின்றார்.

''வள்ளுவன் செய்திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனு ஆதி ஒரு குலத்திற்கு ஒருநீதி''



www.saivamonline.com

நூலாசிரியர்கள் பலர், ஒரு குலத்திற்கு ஒரு நீதிசொன்னார்கள். ஒருமொழிக்கு ஓர் இயல்பு கற்பித்தார்கள். ஆனால் வள்ளுவரோ மனித குலம் அனைத்திற்கும் ஒரே நீதி உரைத்தார் என மகுடம் சூட்டுகின்றார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது. தமிழருக்காக மட்டுமா அது எழுதப்பட்டது; இல்லையே, தமிழர் மொழி, நாடு, ஊர், அரசு, எல்லை, ஏன் தமிழ் என்ற சொற்கூட வள்ளுவத்தில் இல்லை. உலக மக்களுக்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிந்தித்த ஒரு பேரறிஞரின் சிந்தனைத் தொகுப்பல்லவா திருக்குறள்? நாம் பெருமிதம் கொள்ளலாம்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''

---

**நீர் இல்லாவிடின் உடல்வாடி விடும். உயிர்க் குலத்திற்கு உணவு தருவோன் உயிர் தருவோன் ஆகின்றான். உணவு எப்படி வரும்? நிலமும் நீரும் சேர்ந்தால்தானே வரும்? எனவே, எவன் ஒருவன் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்க்கிறானோ அவனே உலகில் உடலையும், உயிரையும் படைத்தவன் ஆகிறான்.**

---

எவ்வளவு அரிய சிந்தனை. எக்குடிப்பிறப்பினும் யாவரே ஆயினும் அவர்தம் குடிப்பிறப்பால் வேறுபாடு ஏதும் இல்லை என்று கூறும் துணிவு வள்ளுவருக்கு இருந்திருப்பது கண்டு வியக்கிறோம். அவர் பாடிய காலத்திலேயே நடைமுறைச் சமுதாயத்தில் சாதி, வருணம், இனம் என்ற பேதம் நிலவியிருந்ததைச் சங்க நூல்கள் விளக்குகின்றன. வள்ளுவர் தம் நிகழ்காலச் சமூகத்தோடு ஒத்துப்போகாது, எதிர் நீச்சல் இட்டு உலக நலம் பேண உரிமை முழக்கம் இடுகிறார்.

வள்ளுவம் முழுவதுமே உலகளாவியமனிதகுல அறச் சிந்தனைகளின் தொகுப்பே ஆகும். அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சில அதிகாரங்களும், குறள்களும் மிகுந்த கூர்மை உடையன. அறத்துப்பாலில் வரும் ஒப்புரவு அறிதல் என்ற



www.saivamonline.com

அதிகாரம் முழுவதுமே உலகம் அனைத்திற்கும் பொதுவாகக் கூறிய அறச்சிந்தனையாக அமைகிறது. உரைகாரர் பரிமேலழகர் பல அரிய குறிப்புக்களைத் தருகிறார். ஒப்புரவாவது யாது? ''உலக நடையினை அறிந்து செய்தல்'' என்கிறார். நமக்கு விளக்கம் போதுமானதாக இல்லை: திகைக்கிறோம். மேலும் விளக்குகின்றார். உலகநடை, வேதநடைபோல அறநூல்களுள் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்து ஆதலின் ஒப்புரவு அறிதல் என்றார் எனப் பரிமேலழகர் மேலும் விளக்கம் தருகிறார்.

இதைச் செய்; இதனைச் செய்யாதே எனப் பேசும் அறநூல்கள். உலகியலில் அறக்கோட்பாடு முற்றிலும் ஒத்துப் போகாதிருக்கலாம். நாம் வாழும் உலகத்தின் போக்கை நுனித்தறிந்து, அதற்குத் தகச்செயற்படும் அன்பு கலந்த சமூக நலம் பேணும் தனிமனித ஒழுங்கினை ஒப்புரவு என வள்ளுவர் வகுக்கிறார்.

---

**மனித நேயத்தையும், உயிர் இரக்கத்தையும் முன்னிறுத்தி உலகளாவிய ஒருமைப்பாடு காண விழைந்தவர் வடலூர் இராமலிங்க அடிகளார். சமயவாதியாகத் தொடங்கி, சமுதாய ஒருமைக்காகச் சிந்தித்த பரிணாம வளர்ச்சியை அவர் கவிதைகளில் காணலாம். அவர் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம் உலகளாவிய மனித் நேயத்தை மையமாகக் கொண்டது.**

---

மழை வழங்கும் மேகத்திற்கு உயிர்கள் என்ன கைமாறு செய்ய இயலும்? மழை மேகம் போல் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாது உலக நலம் கருதிச் சான்றோர் இயற்றும் உலக உதவிகளுக்கும் உலகத்தார் என்ன கைமாறு செய்ய இயலும் என வினாத் தொடுக்கிறார்.



www.saivamonline.com

உலக நடை அறிந்து, தாம் முயன்று ஈட்டிய செல்வங்களை உலகநலம் கருதி வழங்கப் பணிக்கிறார் அவர். அவ்வாறு கைமாறு கருதாது வழங்குவோரும் பல திறத்தினர் என்பதற்கு மூன்று உவமைகளையும் வள்ளுவர் குறிக்கிறார். ''ஊருணி நீர் நிறைந்தற்று'', ''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று'', ''மருந்தாகித் தப்பாமரத்தற்று'' என்பன அவை. இவ்வுவமைகள் நுண்பொருள் விளக்குவன. முறையே அத்தகையோரைப் பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான் என்னும் அடைமொழிகளால் சிறப்பிக்கின்றார். உலகச் சிந்தனைகளில் உன்னதமான இவை பெரிதும் ஆராய்ந்து போற்ற வேண்டுவன. உலகினைக் காடு திருத்தி நாடாக்கியவர்களும், திட்டமிட்டுக் கல்வி தந்தவர்களும், அறிவால் புதுமை கண்டு மனித குலத்தை வாழ்வித்தவர்களும், என்றென்றும் உலகத்தார் வணக்கத்துக்கு உரியவர்கள் என்பதை வள்ளுவர் நயமுறக் குறித்துச் செல்கிறார்.

---

**உயிர்க்குலம் அனைத்தும் ஒன்று. இறைவன் ஒருவனே, அவன் ஒளி வடிவானவன். அவன் இயல்பு கருணை. புலால் மறுத்து, உயிர்க்கொலை தவிர்த்து, ஆண் பெண் பேதமின்றி வாழ முனைவோர் சன்மார்க்கிகள். இவர்களுக்கு மதம் சாதி வருணம் ஏதும் இல்லை.**

---

இல்லற வாழ்வின் நிறை பயன் புகழ். மனிதன் பிறப்பான், இறப்பான், இறவாது உலகில் நிலைபெறுவது எது? புகழ் மட்டுமே என்கிறார் வள்ளுவர். முல்லைக்குத்தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை அளித்த பேகன், கல்லணை கட்டிய கரிகாலன், தஞ்சைப் பெரிய கோயில் கட்டிய இராசராசன் ஆகியோர் இன்று இல்லை. ஆனால் அவர்கள் புகழில் அழியாது வாழ்கிறார்கள். இதனை,

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்''

எனப் பதிவு செய்கிறார் வள்ளுவர். உலகுக்கு எல்லாம் ஒத்த அரிய சிந்தனை இது. இதனையே புறநானூறு,



www.saivamonline.com

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே''

என விரித்துரைக்கிறது.

வீடு பேறு மனித வாழ்வின் உயரிய குறிக்கோள். அதனை எய்த வழி என்ன? இல்லறமா? துறவறமா? வள்ளுவர் அழகானவிடை தருகிறார். உலகம் மனிதனுக்கு எல்லைகளை விதித்திருக்கிறது. இதைச் செய்; புகழ் வரும், இதனைச் செய்யாதே பழி வரும், என மரபு வழி, பாதை இட்டுக் காட்டியுள்ளது. வேடங்கள் இன்றியமையாமை உடையன அன்று. ஒழுக்கமே சீரிய வழி. உலகம் போற்றுவதைச் செய்யாவிடினும், உலகம் பழிப்பதையாவது செய்யாதிருக்கப் பழகிக் கொள். அதுபோதும் என்கிறார் வள்ளுவர்.

---

**வடலூர் இராமலிங்க அடிகளாரை, அவர் தம் உயரிய உலகளாவிய மனிதகுல ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளை உள்ளவாறு உலகம் அறியவும் இல்லை நாம் அறிவிக்கவும் இல்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் உலகளாவிய பொது நோக்குக் கொண்டார் இவரைப்போல் எவரும் இலர்.**

---

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்''

எவ்வளவு அரிய உலகியற் சிந்தனை. வியப்பு நம்முன் விரிந்து மலர்கிறது. திருக்குறள் மட்டுமன்று, நாலடியாரும், ஆசாரக் கோவையும், நீதிநெறிவிளக்கமும், உலக நீதியும், ஆத்தி சூடியும், கொன்றை வேந்தனும் கூட உலகச் சிந்தனைகளின் பிழிவுகளாகவே திகழ்கின்றன. உலகின் வேறு எந்த ஒரு மொழி இலக்கியமும், தமிழ்போல உலகளாவிய சிந்தனைகளை உள்ளடக்கி இருக்க இயலுமா என்ற வியப்பு நம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கிறது.





www.saivamonline.com

சடைச்சங்க இலக்கியங்களைச் சான்றோர் செய்யுள் என்றும், புலவர்களைச் சங்கச்சான்றோர் என்றும் பிற்கால உரைகாரர்கள் போற்றி நின்றனர். சங்க நூல்களுள் ஒன்றாகிய புறநானூறு வியப்பூட்டும் அறப்பாட்டை இட்டுக் காட்டுவது. உலகளாவிய உன்னதச் சிந்தனைகள் அங்கே ஏராளம் உண்டு. தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் இவ்வாறு வாழ்க என வற்புறுத்தி வழி காட்டிய சான்றோர்கள் சங்கப் புலவர்கள். புறநானூறு கூறும் உலகச் சிந்தனைகள் தமிழ் மக்களின் நாகரிக வரலாற்றிற்குப் பொன் வண்ணம் பூசுவன. சிலவற்றைப் பார்க்கலாம்.

நாடாளுவோர்க்கு அறிவுரை கூறுகிறார் நரிவெரூஉத்தலையார் என்ற கவிஞர். நாடாள்வோரில் பலரிடம் அருளும் இல்லை; அன்பும் இல்லை. அன்னார் அடையப்போவது நரகமே. மன்னா. நீ அத்தகையோரில் ஒருவனாக வாழாதே. தாய் ஒருத்திக் குழந்தையைப் பேணி வளர்ப்பது போல் மக்களை உலகின் தாயாகி நின்று காத்தல்செய் என்கிறார் கவிஞர். நாடாள்வருவோர்க்கெல்லாம் உரிய உயரிய படிப்பினை இது.

---

**உலகம் ஒன்றாக வேண்டும். உயிர்க்குல நேயம் வேண்டும். உலகளாவிய ஒருமை வேண்டும் என்பதற்கு மேலாக மானுடக் குறிக்கோள் வேறு இருத்தல் இயலாது. விலங்கும், பறவைகளும் பெறாத வளர்ச்சியையும் உயர்ச்சியையும் மனிதகுலம் பெற்றிருப்பதற்கு அடிப்படையே கூடி வாழும் சமூகப் பண்பினால்தான்.**

---

''அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி''.

குடபுலவியனார் உலகியல் அறிந்த பெருஞ்சான்றோர். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூற வந்தவர், உலக மன்னவர்களுக்கெல்லாம் பொதுவாய கடமைப்பண்புகளை அழுத்தம் திருத்தமாகப் பேசுகின்றார். நீர் இல்லாவிடின் உலகம்வாடி விடும். உயிர்க் குலத்திற்கு உணவு தருவோன் உயிர்



www.saivamonline.com

தருவோன் ஆகின்றான். உணவு எப்படி வரும்? நிலமும் நீரும் சேர்ந்தால் தானே வரும்? எனவே, எவன் ஒருவன் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்க்கிறானோ அவனே உலகில் உடலையும் உயிரையும் படைத்தவன் ஆகிறான். ஆதலின் குழிந்துகிடக்கும் நிலப்பரப்பில் எல்லாம் தண்ணீரை நிரப்ப உடனே ஏற்பாடு செய் என்கிறார் கவிஞர்.

''நீர் இன்றி அமையா யாக்கை கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே

---

**தமிழர்கள் தங்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் போற்றி நிற்பவர்கள். தங்கள் கலாசாரங்களில் அழுத்தமான பிடிப்புடையவர்கள். என்றாலும், பிறர் எவராயினும் அவர்கள் நாகரிகங்களுக்கும் மதிப்பளித்து வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர் பண்பினர்.**

---

நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருக
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளா தார் இவண் தள்ளா தோரே''.

அணைக்கட்டுகளும், ஏரிகளும், குளங்களும், பிறநீர் நிலைகளுமே உயிர் வாழ்க்கையின் ஆதாரம் என்ற உயர்சிந்தனை உலகளாவிய பொது நோக்கில் மலர்ந்து நம் நெஞ்சில் நிறைகிறது.

எது நல்ல நிலம்? ஒரு வினா முன் வைக்கப்படுகிறது? நீர் வளம் மிக்க மருதமா? மலைவளம் மிக்க குறிஞ்சியா? கடல்வளம் மிக்க நெய்தலா? இல்லை; இவை எதுவும், நன்னிலம் அன்று? பின் எது நல்ல நிலம்? சங்ககாலப் பெண் சான்றோராகிய ஔவையார் விடைதருகிறார்.



www.saivamonline.com

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

ஆண் மக்கள் எங்கே பண்பும், ஒழுக்கமும் மிக்க நல்லவர்களாக வாழ்கிறார்களோ அதுவே நல்ல நிலம் என்று புதிய சிந்தனை தருகிறார். எத்துணை உயர்சிந்தனை. மனிதன் மனிதனாக இல்லாத இடத்தில், நிலவளம் மட்டும் என்ன பயனைத் தரும்? வாழிய நிலனே, என்று வாழ்த்துக் கூறுவதன் வாயிலாக இச்சீரிய சிந்தனையை உலகளாவியதாக ஔவையார் உயர்த்தி நிறுத்துகின்றார்.

---

வேற்றுமை களைந்து மனித இனத்தை ஒருங்கிணைக்கும் ஆற்றல் இலக்கியங்களுக்கு மட்டுமே உண்டு. தனிமனித முயற்சிகளும், இயக்கங்களின் செல்வாக்கும் காலவரையறைகளுக்கு உட்பட்டன. காலத்தைக் கடந்து வாழும் அமரத்தன்மை பெற்ற இலக்கியங்கள் மனித குலத்தோடு காலகாலத்திற்கும் ஒட்டி உறவாடும் தன்மை கொண்டன.

---

கணியன் பூங்குன்றனாரின் சிந்தனைகளை அறியாத தமிழர் இலர். தமிழ் இலக்கிய உலகச் சிந்தனைத் தடத்தில் அழிக்கவியலாத ஒரு கல் எழுத்து இது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகில் எல்லா ஊரும் எமதே, உலகவர் அனைவரும் என் உறவினரே என்ற சிந்தனை உன்னதமானது, உலகவர் அனைவரும் நெஞ்சில் பதித்து வைத்துப் போற்ற வேண்டிய அருமைப்பாடு உடைய வரி இது.



www.saivamonline.com

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்ற தெளிவு பட்டறிவால் செழிப்பது.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

நடுநிலை நின்று வாழ்வை உற்று நோக்கித் தெளிந்த சான்றோர்களின் உன்னத மன வெளிப்பாடு இங்கே பதிவாகியுள்ளது. விதிக்கோட்பாட்டை முன்னிறுத்திப் பேசப்பட்ட அரியபாடல் வரிகள் இவை என்றாலும், இத்தகு தெளிவு அறநெஞ்சத்தார்க்கு அன்றி வாராது என்பதைக் கவிதை உறுதி படக் கூறுகிறது. கணியன் பூங்குன்றன் உலகத்தார் நெஞ்சில் எல்லாம் சிம்மாசனம் போட்டு அமர்கின்றார். அவரை உருவாக்கிய தமிழ்நாடு உலகவர் முன் தலை நிமிர்கிறது. இம்மண்ணில் பிறந்த நாமும் இப்பெருமிதத்தில் பங்கேற்று மகிழ்கிறோம்.

---

**தமிழ் இலக்கியம் படைத்தோர் பலரும் வறுமையில் வாடியோர். புலமை தந்த பெருமிதத்தால் உலகில் தலை நிமிர்ந்து நின்று வறுமையைப் புறங்கண்டவர்கள். வறுமை அவர்கள் நெஞ்ச விரிவை, உலகளாவிய நேயத்தை தடைப்படுத்த இயலாது தோற்றே நின்றது. தனி மனிதர்களைச் சார்ந்து வாழ்ந்த போதும் அவர்கள் நெஞ்சில் உலகமே விரிந்து நின்றது.**

---

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற நரிவெரூஉத் தலையாரின் உயரிய சிந்தனையும்,

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"



www.saivamonline.com

என்ற கழைதின் யானையாரின் அற்புதச் சிந்தனையும், இவை போல்வன பிறவும் மனித குலத்திற்கெல்லாம் புறநானூறு வழங்கிய அறக்கொடைகளாக அமைகின்றன.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்ற திருமூலர் சிந்தனை சமய உலகம் தந்த அரிய கொடைகளுள் ஒன்று. சைவ வைணவப் பேரிலக்கியம் படைத்த அருளாளர்கள் தத்தம் வழிபடு தெய்வத்தை முன்னிருத்தி வாழ்த்தினர். ஆயினும் அங்கேயும் உலகச் சிந்தனைகள் பல உண்டு.

"அறம்வெல்லும் பாவம் தோற்கும்" என்ற சீரிய கருத்தைச் சொல்வதற்காகவே இராமகாதை பாடினார் கம்பர் என்பது அறிஞர் கருத்து. இராமன் அவதரித்த கோசல நாட்டை வருணிக்கும் கம்பர் உலகில் நாடுகள் எவ்வாறு சிறந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் கவிதை ஒன்றில் பதிவு செய்கிறார். கோசலம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் அறியோம். கம்பரும் முற்றாக

---

**நாடு, மதம், மொழி, இனம், சாதி என்பன போலியான நொய்மையுடைய அரண்கள். வீறு கொண்டு எழும் மனித நேயத்தின் முன் இவைகள் என்றேனும் ஒருநாள் தகர்க்கப்படும். அந்தப் போராட்டத்திற்கு மனித இனத்தை உலகளாவிய ஒருமைச் சிந்தனை வாயிலாகத் தயாரிக்கும் உன்னதப் பணியை இலக்கியங்களே நிகழ்த்தி வருகின்றன.**

---

அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கம்பர் தாம் காண விரும்பிய ஒரு பெருமிதம் மிக்க நாட்டை கோசலத்தின் மீது ஏற்றிப் புனைகின்றார். உலகில் மக்கள் வாழும் எந்த ஒரு நாட்டிலும் மக்களின்பால் வறுமை இருத்தல் கூடாது. உடல் நொய்மை இருத்தல் கூடாது. பொய்மை இருத்தல் கூடாது. அறியாமை இருத்தல் கூடாது என்று கவிதை நெஞ்சம் ஆசைப்படுகிறது. இந்த அவலங்கள் இங்கே இல்லை என்று கோசலத்தைப் படைக்கின்றார்.



www.saivamonline.com

"வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செருநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரையிலாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்"

இத்தகு நாடு உருவாக வேண்டும்; உலகம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் கவிஞன் கண்ட கனவு உலகளாவிய உயர் சிந்தனைகளில் சிலவாகின்றன.

கோசலம் பாடி முடித்த கம்பர், தலைநகர் அயோத்தி நகரைப் புனைய வருகிறார். தாம் காண விரும்பிய நாட்டைக் காட்டி, தாம் காண விரும்பிய மக்களைக் காட்ட விரும்புகிறார். அயோத்தியில் வீடுகளையோ, அரண்மனையையோ, களஞ்சியங்களையோ பாதுகாக்கக்காவலர் எவரும் இல்லை; ஏன் தெரியுமா? நாட்டில் கள்வர்கள் என எவரும் இல்லை. ஈதல் அறம் எனக்கருதி அங்கே வழங்குவாரே இல்லை; ஏன் என்றால் வாங்கிக் கொள்ள வறுமையாளர் எவரும் அங்கே இல்லை. எவ்வளவு பெரிய ஆசை கவிஞருக்கு.

---

**ஒரு தாய் மகன் உறவு, காதலன் காதலி இன்பம், ஒரு கடவுள் பக்தன் நேயம் இவை எல்லாம் மனித குலத்திற்குப் பொதுவானவை. இந்த மாறுபடாத மனித குலப்பண்புகள், போலித்தடைகளை என்றேனும் ஒருநாள் தகர்க்கும் வல்லமை உடையன என்பதை இனங்கண்டவர்கள் தமிழ்க் கவிஞர்கள்.**

---

"கள்வாரிலாமைப் பொருள் காவலும் இல்லை, யாரும்
கொள்வாரிலாமைக் கொடுப்பார்களும் இல்லை மன்னோ"

அயோத்தியில் முற்றக்கற்றவர் என எவரும் இல்லையாம், ஏன் எனின் அங்கே கல்லாதவர் என்று யாருமே கிடையாதாம்.

"கல்லாது நிற்பார் பிறர்இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாரும் இல்லை"

எவ்வளவு பெரிய எதிர்பார்ப்பு? செல்வர், வறியர் என அங்கே உண்டா?



www.saivamonline.com

"எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ"

உலகம் இந்த நிலையை என்று எய்தும் என்று அன்பு நெஞ்சம் ஏங்குகின்றது. வாழும் நாட்டில் இல்லாததைக் கவிமனம் கற்பனை நாட்டின் மேல் பொருத்தி மகிழ்கிறது.

கம்பரைத் தொடர்ந்து உலகளாவிய சிந்தனை கொண்ட கவிஞர் மரபு பெரிதும் வளரலாயிற்று. பின் வந்தோரில் மனித நேயத்தையும், உயிர் இரக்கத்தையும் முன்னிறுத்தி உலகளாவிய ஒருமைப்பாடு காண விழைந்தவர் வடலூர் இராமலிங்க அடிகளார். சமய வாதியாகத் தொடங்கி, சமுதாய ஒருமைக்காகச் சிந்தித்த பரிணாம வளர்ச்சியை அவர் கவிதைகளில் காணலாம். அவர் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம் உலகளாவிய மனித நேயத்தை மையமாகக் கொண்டது.

---

**தேசங்களாலும், இனங்களாலும், மொழியாலும் வேறுபட்டுக் கிடக்கும் உலகவர்களின் அடிப்படைப் பண்புகள் என்றும் மாறாதவை. அவற்றை இனங்கண்டு போற்றி மனிதகுல ஒருமைக்கு நெஞ்சார்ந்த நேசக்கரம் நீட்டிய தமிழ்க் கவிஞர்கள் நமது வணக்கத்துக்குரியவர்கள். இவை தமிழர் செய்த நற்பேற்றின் விளைவுகள்.**

---

"பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியது இதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர்
செறியிருள் அடைந்தனர்; ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்து ஒருபொது நெறியெனும்வான்
புத்தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக"

என்று இறைவன் தமக்கு ஆணையிட்டதாக அவரே குறிக்கின்றார். உயிர்க்குலம் அனைத்தும் ஒன்று. இறைவன் ஒருவனே, அவன் ஒளி வடிவானவன். அவன் இயல்பு கருணை. புலால் மறுத்து, உயிர்க்கொலை தவிர்த்து, ஆண் பெண் பேதமின்றி வாழ



www.saivamonline.com

முனைவோர் சன்மார்க்கிகள். இவர்களுக்கு மதம் சாதி வருணம் ஏதும் இல்லை என்பன அவர் அருளிய உலக ஒருமைச் சிந்தனைகளின் சாரமாகக்கொள்ளத்தக்கன.

''அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற்கென்றே எனை இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன்''.

---

**தமிழ்க் கவிஞர்கள் குறுகிய எல்லைகளுக்கு உள்ளே தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் மொழியையும், நாட்டையும் பெரிதும் நேசித்தனர். இந்த நேசம் இன்னொரு மொழியையோ, நாட்டையோ இகழ இடந்தரவில்லை.**

---

என வள்ளலாரே தம் வருகைக்கான காரணத்தைக் குறிக்கின்றார். ''உலகர் அனைவரையும் சகத்தே திருத்த'' அவர் முனைந்த பாங்கை அவர் கவிதைகளில் பரவலாகக் காணலாம்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தை நினதருட் புகழை இயம்பியிட வேண்டும்''

என இறைவன்பால் வேண்டுகோள் வைக்கிறார். சமயம் மனித நேயத்திற்குத் தடையானால் அதனையும் துறக்கலாம் என துணிச்சலான நெறி பேசுகின்றார். வடலூர் இராமலிங்க அடிகளாரை, அவர்தம் உயரிய உலகளாவிய மனிதகுல ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளை உள்ளவாறு உலகம் அறியவும் இல்லை; நாம் அறிவிக்கவும் இல்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் உலகளாவிய பொது நோக்குக் கொண்டார் இவரைப்போல் எவரும் இலர்.



www.saivamonline.com

தமிழ் இலக்கியத்தில் உலகச் சிந்தனைகள் குறித்த ஆய்வில், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைத்தடத்தில் புரட்சியை விதைத்துப் பெரும் மாற்றத்தைச் செய்த அமரகவி பாரதியாரைப் புறக்கணித்தல் இயலாது. உலகம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் நன்கு அறியப்பட்ட காலம் அவருடையது. நாடு, மொழி, இனம் என்ற ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் அவர் காலத்தில் மனிதகுலத்தை ஆட்டிப்படைத்தன. உளம் வெதும்பிய பாரதியார் உலகம் பற்றி விரிவான சிந்தனைகள் பலவற்றைத்தம் கவிதைகளில் குறிப்பித்தார்.

விடுதலை வேள்வியில் ஈடுபட்டுக் கவிதை படைத்த பாரதி பாடல்களில் தமிழும், பாரதமும் தனி இடம்பெற்றன. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த பாரதி, உலகில் விடுதலைக்காகப் போராடிய நாடுகளை எல்லாம் வாழ்த்தி வரவேற்றார். அமைதி பெற்ற மனநிலையில் அவர் படைத்த கவிதைகளில் உலகத்தை எல்லாம் அன்பு ஒன்றே இணைக்கவல்லது என்ற அரிய குறிப்புக்காணப்படுகிறது.

''மானுடர் உழாவிடினும் வித்துநடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றே'',

''யான் எதற்கும் அஞ்சுகிலேன் மானுடரே நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா,
ஊண்உடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்''

ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய பாரதி, அவர்தம் ஆதிக்க உணர்வை வெறுத்தாரே அன்றி ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. பகைவனும் அருளும் பண்பில் ஒரு கவிதை அமைகிறது.

''பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே
பகைவனுக்கு அருள்வாய்''

புகை நடுவினுள் தீ இருப்பதைப்
பூமியிற் கண்டோமே நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே



www.saivamonline.com

பகை நடுவினுள் அன்புருவானநம்
பரமன் வாழ்கின்றான் நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்றான்''.

என்ற கவிதை வரிகள் உலகளாவிய மனித நேயத்தில் பிறக்கின்றன. உலகவர், அறியாமையால் பற்றி நிற்கும் ஜாதி, மதங்களைப் பாரதி வன்மையாகக் கண்டிக்கின்றார்.

''சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு
தன்னில் செழித்திடும் வையம்''

என்று உலகவர்க்கு அறிவுரை கூறுகின்றார். அவர்தம் உரைநடைகளிலும், காவியங்களிலும் வரும் உலகச் சிந்தனைகள் பல. மனிதன் சுதந்திரத் தாகம் உடையவன். மனிதனை மனிதன் அடிமைப் படுத்துதல் கூடாது. பூமியில் எவர்க்கும் எவரும் அடிமைப்படத் தேவைஇல்லை. பெண்மை விடுதலையும் சிறத்தல் வேண்டும். உழவும் தொழிலும் உலகெல்லாம் சிறக்க வேண்டும் என்பன பாரதியாரின் உயரிய உலகச் சிந்தனைகளாகக் கொள்ளத்தக்கன.

பாரதியாரை அடியொற்றி வந்தவராயினும் உலகச் சிந்தனைகளில் பாவேந்தர் பாரதிதாசன் வேறுபட்டுத் தனி முத்திரைகளைப் பதித்துள்ளார். உலக ஒற்றுமை பற்றிப் பேச வரும் பாவேந்தர்,

''ஆயுதங்கள் பரிகரிப்பார்; அமைதி காப்பார்
அவரவர்தம் வீடுநகர்நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய்வார்
மாம்பிஞ்சு உள்ளத்தின் பயனும் கண்டோம்''
''தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே''

எனப்பாடி, உலக மக்கள் எல்லாரும் ஒருவரே என்ற நிலை உருவாக வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்துகின்றார்.

பாவேந்தரின் உலகப்பன் பாட்டு பிரசித்தமானது. ''உலகம் உன்னுடையது'' என்ற அவர் கவிதை உணர்ச்சிமயமானது. உலகில் அஞ்சிக் கிடந்த கோழை மனிதர்களை ஆத்திரத்தோடு தட்டி எழுப்பி வீறுகொள்ள விடிவெள்ளி ஆகிறார்.



www.saivamonline.com

''மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற, எழுந்து நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்து, சுடர்முகம் தூக்கு
மீசையை முறுக்கி மேலே ஏற்று,
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்
நகைப்பை முழக்கு நடத்து உலகத்தை''

என்று வீழ்ந்து கிடந்த உலகவரை உலகம் நடத்த வருக வென அறைகூவல் விடுகிறார். மேலும் கூறுவார்,

''உன்வீடு உனது பக்கத்தது வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டோடு நாட்டை இணைத்து மேலேஏறு
ஏறுவிடாமல் ஏறு மேன்மேல்''

ஏறி என் செய்வது? என்று திகைத்து நிற்கும் உலகவர்களுக்கு அரிய காட்சிகளைக் காட்டுகிறார்.

''ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களை,
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்,
என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள், உன்னைச் சங்கமம் ஆக்கு,
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு.''

மனித குலத்திற்கு எத்துணைபெரிய நம்பிக்கை ஊட்டுகின்றார் பாவேந்தர். மேலும் அறிவுறுத்துகின்றார்,

''பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ணஉண், உடுத்த உடுப்பாய்
புகல்வேண்டி உடைமை மக்களுக்குப்பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து''

என்று உலகத்தை எல்லாம் ஒன்றாக நடத்தும் உன்னத நெறி பேசி ஒளியூட்டுகின்றார் பாரதிதாசனார். கூர்த்த அவர்தம் ஆவேசக் கவிதைகளில், முடங்கிக் கிடந்த மனிதஇனம் மேலே நிமிர்ந்து விசுவரூபம் கொள்கிறது.



www.saivamonline.com

பாவேந்தர் வழியில் வந்த கவிஞர் சுரதாவும், பட்டுக்கோட்டையாரும், கவியரசர் கண்ணதாசனும், உரைநடை இலக்கிய வாதிகளும் விரிவாகவே சிந்தித்தனர்.

உலகம் ஒன்றாக வேண்டும். உயிர்க்குல நேயம் வேண்டும். உலகளாவிய ஒருமை வேண்டும் என்பதற்கு மேலாக மானுடக் குறிக்கோள் வேறு இருத்தல் இயலாது. விலங்கும், பறவைகளும் பெறாத வளர்ச்சியையும் உயர்ச்சியையும் மனிதகுலம் பெற்றிருப்பதற்கு அடிப்படையே கூடிவாழும் சமூகப் பண்பினால்தான். தமிழர்கள் தங்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் போற்றி நிற்பவர்கள். தங்கள் கலாசாரங்களில் அழுத்தமான பிடிப்புடையவர்கள். என்றாலும், பிறர் எவராயினும் அவர்கள் நாகரிகங்களுக்கும் மதிப்பளித்து வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர் பண்பினர்.

வேற்றுமை களைந்து மனித இனத்தை ஒருங்கிணைக்கும் ஆற்றல் இலக்கியங்களுக்கு மட்டுமே உண்டு. தனிமனித முயற்சிகளும், இயக்கங்களின் செல்வாக்கும் காலவரையறைகளுக்கு உட்பட்டன. காலத்தைக் கடந்து வாழும் அமரத்தன்மை பெற்ற இலக்கியங்கள் மனித குலத்தோடு காலகாலத்திற்கும் ஒட்டி உறவாடும் தன்மை கொண்டன.

தமிழ் இலக்கியம் படைத்தோர் பலரும் வறுமையில் வாடியோர். புலமை தந்த பெருமிதத்தால் உலகில் தலை நிமிர்ந்து நின்று வறுமையைப் புறங்கண்டவர்கள். வறுமை அவர்கள் நெஞ்ச விரிவை, உலகளாவிய நேயத்தை தடைப்படுத்த இயலாது தோற்றே நின்றது. தனி மனிதர்களைச் சார்ந்து வாழ்ந்த போதும் அவர்கள் நெஞ்சில் உலகமே விரிந்து நின்றது. மக்கள் என்றென்றும் போற்ற வேண்டிய பெரு நெறிகளையே அவர்கள் சிந்தித்தனர். பெரும் பெரும் மன்னர்களும், செல்வர்களும் மக்கள் மனத்தடத்தில் இன்று வாழவில்லை. காரணம் செல்வம் அரண் அமைத்துக்காக்க வேண்டுவது. கல்வி எல்லைகளைக் கடந்து ஒளிவீசவல்லது. கவிஞர்களின் வெற்றி கற்பனைகளையும் வருணனைகளையும் சார்ந்து அமைந்ததன்று. உலகளாவியமனித குல நேயமே அவர்கள் வாழ்வின் இரகசியம்.

நாடு, மதம், மொழி, இனம், சாதி என்பன போலியான நொய்மையுடைய அரண்கள். வீறு கொண்டு எழும் மனித



www.saivamonline.com

நேயத்தின் முன் இவை என்றேனும் ஒரு நாள் தகர்க்கப்படும். அந்தப் போராட்டத்திற்கு மனித இனத்தை உலகளாவிய ஒருமைச் சிந்தனை வாயிலாகத் தயாரிக்கும் உன்னதப் பணியை இலக்கியங்களே நிகழ்த்தி வருகின்றன.

ஒரு தாய் மகன் உறவு, காதலன் காதலி இன்பம், ஒரு கடவுள் பக்தன் நேயம் இவை எல்லாம் மனித குலத்திற்குப் பொதுவானவை. இந்த மாறுபடாத மனித குலப் பண்புகள், போலித்தடைகளை என்றேனும் ஒரு நாள் தகர்க்கும் வல்லமை உடையன என்பதை இனங்கண்டவர்கள் தமிழ்க் கவிஞர்கள். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தெளிவும், ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற பார்வையும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் ஞானமும் காலங்கடந்தாவது உலகத்தை ஒரு குலமாக்கும் மாமருந்துகள் என்பதை அறிந்தவர்கள் தமிழ்க் கவிஞர்கள். இவர்கள் நல்லெண்ணம் நிறைவேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை. உலகம் ஒன்றாகும்; உயிர்க்குலம் தழைக்கும்.

தேசங்களாலும், இனங்களாலும், மொழிகளாலும் வேறுபட்டுக் கிடக்கும் உலகவர்களின் அடிப்படைப் பண்புகள் என்றும் மாறாதவை. அவற்றை இனங்கண்டு போற்றி மனிதகுல ஒருமைக்கு நெஞ்சார்ந்த நேசக்கரம் நீட்டிய தமிழ்க் கவிஞர்கள் நமது வணக்கத்துக்குரியவர்கள். இவை தமிழர் செய்த நற்பேற்றின் விளைவுகள்.

தமிழ்க் கவிதைத் தடத்தில் பூத்த உலகச் சிந்தனைகளும், உலகளாவிய மக்கட் சிந்தனைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டன. தமிழ்க்கவிஞர்கள் குறுகிய எல்லைகளுக்கு உள்ளே தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் மொழியையும், நாட்டையும் பெரிதும் நேசித்தனர். இந்த நேசம் இன்னொரு மொழியையோ, நாட்டையோ இகழ இடந்தரவில்லை. தங்கள் சீரிய சிந்தனைகளை உலகவர்க்காகச் சிந்தித்தனர். அவர்களை முன்னிலைப் படுத்தியே உரைத்தனர். அன்பால் மனிதகுலம் ஒன்றுபட வேண்டும் என்பதே அவர்கள் பேராசை. இந்த ஆசை நிறைவேறும் நாள் தமிழ்க் கவிஞர்களின் உள்ளம் குளிரும் நாள். ஒரு குலம் உருவாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

www.saivamonline.com